JAN 20.. TIRUNELVELI

# தமிழ்நாடு அரசு

சுருக்கம்

வீட்டுவசதி — தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டம் — வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும் நாளில் ஓய்வு பெற அனுமதிக்கப்படாமல் பணியிடை நீக்கம் செய்யப்படும் அரசு அலுவலர்கள் அவர்கள் வசிக்கும் வாடகைக் குடியிருப்புகளை காலி செய்து தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடம் ஒப்படைத்தல் — ஆணை வெளியிடப்படுகிறது.

================================================

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி (வீ.வ.3(1)) துறை

அரசாணை (நிலை) எண் 350 நாள் 01.10.2004

படிக்கப்பட்டது:-

அரசாணை (நிலை) எண் 5949 (வீட்டுவசதி) தொழில், தொழிலாளர் மற்றும் வீட்டுவசதித் துறை, நாள் 23.12.1965.

====

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட ஒதுக்கீட்டு விதிகளில், விதி ...ன்படி, அரசு வாடகைக் குடியிருப்புகளில் வசிக்கும் அரசு அலுவலர்கள், வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றபின்னர், ஓய்வு பெறும் நாளுக்கு அடுத்த நாளிலிருந்து மூன்று மாதங்களுக்கு அவர்கள் பணியில் இருக்கும்போது கடைசியாக செலுத்திய வாடகை (சாதாரண வாடகை) செலுத்துவதன் அடிப்படையில் தொடர்ந்து இருக்க அனுமதி வழங்கப்படுகிறது.

2. தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ், அரசு அலுவலர்கள் அரசு குடியிருப்பு ஒதுக்கீடு பெறுவது அவர்களது பணி உரிமையாகும். எனவே வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும் நாளில் பணி ஓய்வு பெற அனுமதிக்காது பணியிடை நீக்கம் செய்யப்படும் அரசு அலுவலர்களுக்கு அத்தகைய உரிமை உண்டா என்பது குறித்து அரசு பரிசீலனை செய்தது.

3. அடிப்படை விதிகள், விதி எண் 56(1)(சி)-யின்கீழ் வழங்கப்பட்ட அரசாணையின்படி விதி எண் 56(1)(சி)-ன் கீழ் ஓய்வு பெற அனுமதிக்கப்படாத அலுவலர் ஒருவர், அவர் மீதான குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டாரோ அல்லது இல்லையோ அவர் ஓய்வு பெறும் நாளிலிருந்து அவர் மீதான விசாரணை ...ம் தேதி வரையில் அவரது பணிக்காலம் நீட்டிக்கப்பட்டதாக கருதப்படும். அத்தகைய பணி நீட்டிப்புக் காலத்தில் அவரது பணி உரிமைகள் ... ஓய்வு பெறும் நாளில் எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில் ...க்கப்படும். இந்த நீட்டிப்பு காலத்திற்கான அவ்வலுவலரது ஊதியம் ஓய்வு ... நாளில் தொகுப்பிட்ட ஓய்வூதியத்திற்கு மிகாது இருத்தல் வேண்டும்.

...காலத்தில் விதிமுறை அரசு அல்லது தகுந்த அதிகாரி, அரசு ஊழியரின் ... நிலையில் உள்ள குற்ற நடவடிக்கைகளை தொடர்ந்து நடத்த ஏதுவாக ...வைக்கப்பட்டுள்ளதே தவிர, அவ்வரசு ஊழியர் ஒரு முழுநேர அரசு ஊழியராக ...கப்படவோ அல்லது அவர் தனது பணி உரிமைகளை கோரவோ முடியாது.

..2..

4. மேலும், அடிப்படை விதிகள் 53(5)-ன்படி பணியிடை நீக்கம் செய்யப்பட்ட அரசு அலுவலர், பணி ஓய்வு நாளுக்கு பின்னரும் பணியிடை நீக்கத்தில் தொடர்ந்து இருந்து, பின்னர் அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கையிலிருந்து அவர் முழுவதும் விடுவிக்கப்பட்டால், அவருக்கு அவ்விதிப்படி சாதாரண வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும்போது அனுமதிக்கப்படுவது போன்று அனுமதிக்கப்படுகிறது. வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவைகள் ஓய்வு பெறும் நாளுக்கு முந்தைய நாளில் அனுமதிக்கப்பட்டதைப்போல் ஓய்வு பெறும் நாளுக்கு மறுநாள் முதல் ஒழுங்கு நடவடிக்கைகளில் இறுதி ஆணை வழங்கும் நாள் வரை அனுமதிக்கப்படுகிறது. மேற்கூறப்பட்டுள்ள அடிப்படை விதிகளிலிருந்து அரசு ஊழியர் ஒருவர் ஓய்வு பெறும் நாளில் பணியிடை நீக்கம் செய்யப்படும் போது அவரது பணி உரிமைகள் அந்நாள் முதல் முடக்கப்பட்டு அவர் ஓய்வு பெற அனுமதிக்கப்படமாட்டார் என்பது தெளிவாகிறது, அரசு அல்லது தகுந்த அதிகாரி அவ்வரசு ஊழியர் மீதான ஒழுங்கு நடவடிக்கையினை தொடர்ந்து நடத்திட வேண்டும். அவ்வேளை அவர், அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கையிலிருந்து முற்றிலும் விடுவிக்கப்பட்டால், அவரது பணி உரிமைகள் முழுவதும் மீண்டும் அவருக்கு வழங்கப்படும்.

5. மேலே பத்திகள் 3 மற்றும் 4-இல் விளக்கப்பட்டுள்ள நிலையில் ஒழுங்கு நடவடிக்கை காலத்தில் வழங்கப்படும் பணிநீட்டிப்பு காலத்தில், அவ்வரசு அலுவலர்கள் பணி உரிமைகள் யாவும் அவரது பணி ஓய்வு பெறும் நாளுக்கு முன்னதாக எந்த நிலையில் இருந்ததோ அந்த நிலையிலேயே முடக்கப்பட்ட நிலையில், ஒழுங்கு நடவடிக்கையை முடிக்க வேண்டும் என்ற காரணத்திற்காகவே அவரது பணிக்காலம் நீட்டிக்கப்பட்டதாக கருதப்படுகிறது என்பது தெளிவாகிறது. அந்நிலையில் ஓய்வு பெறும் நாளில் ஓய்வு ________ பெற அனுமதிக்கப்படாமல் பணியிடை நீக்கம் செய்யப்படும் அரசு அலுவலர்கள் அரசு குடியிருப்பில் தொடர்ந்து குடியிருக்க தகுதியற்றவர்கள் ஆகிறார்கள். ஆக, வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும் நாளில் ஓய்வு பெற அனுமதிக்கப்படாமல் பணியிடை நீக்கம் செய்யப்படும் அரசு அலுவலர்கள் அவர்கள் குடியிருக்கும் அரசு குடியிருப்பில் தொடர்ந்து வசிக்க தகுதியற்றவர்கள் என்ற காரணத்தினால், அவர்கள் அக்குடியிருப்பை உடனடியாக காலி செய்து அதனை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று அரசு ஆணையிடுகிறது. மேலும், அவர்கள் குடியிருப்பை காலி செய்யாமல் இருந்தால், அப்போன்று உள்ளவர்களை அரசு குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றும்படி மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சென்னை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

[illegible]
ஒம்/...